Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி - விளம்பரம்
சேகரிக்க முழு நேர - பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

ISO : 9001:2015; QT-57977/1125

DHINATH DHALAM Tamil & English daily Paper

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை

☎ 94440 82959

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,

ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 78 | திங்கள் Monday | 19.01.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# சிறந்த இலக்கிய படைப்புகளுக்கு செம்மொழி இலக்கிய விருது

## முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவிப்பு




சென்னை: "தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஒடியா, வங்காளம் மற்றும் மராட்டிய மொழிகளில் வெளியாகின்ற தலைசிறந்த இலக்கிய படைப்புகளுக்கு தமிழ்நாடு அரசு சார்பில் ஆண்டுதோறும் "செம்மொழி இலக்கிய விருது" என்ற தேசிய அளவிலான விருதுகள் வழங்கப்படும். விருதுடன்,தலா ரூ.5 லட்சம் பரிசுத்தொகையும் வழங்கப்படும்" என்று முதல்வர்மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழாவின் நிறைவு விழாவில் உரையாற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின், மனித இனம் தன்னுடைய சிந்தனைகளை, தான் சேர்த்த அறிவுச் செல்வத்தை, பிறருக்கும், அடுத்தடுத்த தலைமுறைகளுக்கும் கொண்டு சேர்க்கும் கருவிதான், புத்தகங்கள்!

வாசிப்பு மூலமாக, தமிழ்நாட்டில் இருக்கின்ற ஒவ்வொரு வீட்டிலும் அறிவுத்தீ பரவ வேண்டும் என்று, ஏராளமான முன்னெடுப்புகளை நம்முடைய திராவிட மாடல் அரசு சார்பில் எடுத்து செய்து கொண்டிருக்கிறோம்! அதில் முக்கியமானது தான், புத்தகத் திருவிழாக்கள்!

எழுத்தாளர்கள் - பதிப்பாளர்கள் - விற்பனையாளர்கள் - வாசகர்கள் என்று எல்லோருக்குமான உறவுப் பாலமாக,இந்த புத்தகத் திருவிழாக்களை சிறப்பாக நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம்!

தலைநகரான சென்னையில் மட்டுமல்லாமல், தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அனைத்து மாவட்டங்களிலும் புத்தகத் திருவிழாக்களை தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறோம். இதன் தொடர்ச்சியாகதான், இந்த நான்காவது சென்னை பன்னாட்டு புத்தகத் திருவிழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது!

102 நாடுகளின் பங்கேற்போடு சிந்தனையின் ஊற்றாக, பண்பாட்டின் கருவூலமாக, அறிவுப் பரிமாற்றத்தின் அடித்தளமாக, இந்த பன்னாட்டு புத்தகத் திருவிழா நிறைவடைந்ததில் தமிழ்நாடு முதல்வராக மட்டுமல்லாமல், புத்தக ஆர்வலனாகவும் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்! அதுவும் சர்வதேச புக்கர் பரிசை வென்ற கன்னட பெண் எழுத்தாளர் பானு முஷ்டாக், இந்த மேடையில் இருப்பது என்னுடைய மகிழ்ச்சியை மேலும் கூட்டுகிறது!

"ஏற்கனவே, ஒய்.எம்.சி.ஏ. திடலில், ஒரு புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறதே, அப்படியானால், இந்த பன்னாட்டுப் புத்தகத் திருவிழாவின் மைய நோக்கம் என்ன?" என்று சிலர் நினைத்துக் கொண்டிருக்கலாம். அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புவது, இந்தப் புத்தகத் திருவிழாவில் - மொழிபெயர்ப்புகள், பதிப்புரிமை பரிமாற்றம் ஆகியவற்றில்தான் மிகுந்த முக்கியத்துவம் செலுத்தியிருக்கிறோம்! அது எவ்வளவு அவசியம் என்பதற்கு இங்கே வந்திருக்கக்கூடிய பானு முஷ்டாக் அவர்களின் வெற்றியே ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது! ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டதால்தான் அவருடைய "ஹார்ட் லேம்ப்" நூலும், தென்னிந்தியப் பெண்களின் வாழ்வுரிமை வாழ்க்கையும், உலக அளவில் கவனம் பெற்றிருக்கிறது!

நம்முடைய திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த, சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த, பிற்போக்குத்தனங்களை எதிர்க்கின்ற, சமூகநீதிப் பார்வை கொண்ட, ஒரு பெண் எழுத்தாளரின் வருகையால் நம்முடைய புத்தகத் திருவிழா இன்றைக்கு மிகுந்த சிறப்படைந்திருக்கிறது! எதையும் கேள்விகேட்டு, விமர்சனப் பார்வையுடன் அணுகி, பழமைகளை பொசுக்கிய திராவிட இயக்கம் தமிழ்நாட்டை பண்படுத்தியது! அதேபோல, கர்நாடகத்தில், கன்னட புரட்சி இலக்கிய மரபில் இயங்கி வருகின்ற பானு முஷ்டாக், நம்முடைய அழைப்பைஏற்றுவருகை தந்தமைக்காக என்னுடைய நன்றியை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்!

இலக்கியத்திற்கு எல்லைகள் கிடையாது! திருவள்ளுவரின் அறமும், இளங்கோ அடிகளின் காப்பியமும், பாரதியின் கவிதைகளும், பாரதிதாசனின் கருத்துக்களும் உலகமெல்லாம் ஒலிக்கவேண்டும்.

அதே வேளையில், உலகத்தரம் வாய்ந்த அறிவியல் மற்றும் இலக்கியப் படைப்புகள், எளிய தமிழில், நம்முடைய கிராமத்து மாணவர்களுக்கும் கிடைக்க வேண்டும். இதற்காகவே நம்முடைய அரசு,'தமிழ்நாடு மொழிபெயர்ப்பு முகமை' மூலம் பலகோடி ரூபாய் நிதியை ஒதுக்கித் தந்து, கடந்த 3 ஆண்டுகளில், நூற்றுக்கணக்கான நூல்கள் இதன் மூலமாக மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

இந்தப் புத்தகத் திருவிழாவில் நடைபெறும் 'பதிப்புரிமைப் பரிமாற்றம்' வெறும் வணிகம் கிடையாது; இரு மொழிகளுக்கு இடையே நடைபெறுகின்ற பண்பாட்டுக் கைக்குலுக்கல்! செம்மொழியான தமிழின் சங்க இலக்கியங்கள் முதல் நவீன இலக்கியங்கள் வரை உலக மக்களுக்கு சென்று சேர வேண்டும்! இந்த நிலப்பரப்பிலிருந்து எவ்வளவு ஆழமான, பரந்த சிந்தனை கொண்ட கருத்துக்கள், இலக்கிய, இலக்கண மரபுகள் உருவாகியிருக்கிறது என்று நாம் உணர்த்த வேண்டும்!தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் மூலமாக, சிறந்த தமிழ்ப் படைப்புகளை ஆங்கிலம், பிரெஞ்ச், ஜெர்மன் மற்றும் ஸ்பானிஷ் உள்ளிட்ட 20-க்கும் மேற்பட்ட மொழிகளில், மொழிபெயர்க்க நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறோம். A.I. கோலோச்சும் இந்த காலத்தில்,புத்தகங்களையும், நவீனத் தொழில்நுட்பத்தையும் இணைக்க வேண்டிய அவசியத்தையும் எடுத்துகாட்டுவதாக இந்த அரங்கம் சிறப்பாக அமைந்திருக்கிறது.

தமிழ்நாடு என்பது நீங்கள் தொழில் முதலீடு செய்ய மட்டும் உகந்த மாநிலம் இல்லை; அறிவைப் பகிர்ந்து கொள்வதற்கும் மிகச் சிறந்த மாநிலம். கீழடி முதல் பொருநை வரை கண்டெடுத்த தொல்லியல் சான்றுகளை பாருங்கள்; தமிழ்ச் சமூகத்தின் அறிவு மரபு எப்படிப்பட்டது என்பது அப்போது புரியும்!

நாடுகளின் சிறந்த படைப்புகளைத் தமிழில் கொண்டு வாருங்கள்; அதேபோல, மனிதநேயத்தையும், சமூகநீதியையும் பேசுகின்ற எங்கள் திராவிடக் கருத்தியல் இலக்கியங்களையும் உங்கள் நாட்டு மக்களுக்கு அறிமுகப்படுத்துங்கள்;எழுத்தாளர்கள் உலகை வெல்வதை பெருமிதத்தோடு எதிர்நோக்கி அனைவரும் காத்திருப்போம்.

மொழி என்பது பிரிக்கக்கூடிய சுவர் இல்லை, அது உலக மக்களை இணைக்கும் பாலம். புத்தகங்கள் வெறும் பேப்பர் கிடையாது! அவை ஒரு தலைமுறை, மற்றொரு தலைமுறைக்கு விட்டுச் செல்லும் அறிவுச் சொத்து.

மனதுக்கு நெருடலாக ஒரு செய்தி தலைநகர் தில்லியில் இருந்து சில நாட்களுக்கு முன்பு வந்தது. உங்களுக்கெல்லாம் தெரிந்திருக்கும். 2025-ஆம் ஆண்டுக்கான சாகித்ய அகாதெமி விருதுகள் இறுதி செய்யப்பட்டு, அறிவிக்கப்பட இருந்த நிலையில், ஒன்றிய அரசின் கலாச்சாரத் துறை தலையீட்டால்,

விருது அறிவிக்கும் நிகழ்ச்சி ரத்து செய்யப்பட்டிருக்கிறது.இனி,அது நடக்குமா? என்றும் தெரியவில்லை. கலை இலக்கிய விருதுகளில் கூட அரசியல் குறுக்கீடுகள் செய்வது ஆபத்தானது. இப்படி ஒரு சூழலில், தமிழ்நாடு அரசு ஆக்கப்பூர்வமான, உரிய எதிர்வினையை ஆற்றவேண்டும் என்று, பல்வேறு எழுத்தாளர்களும், கலை இலக்கிய அமைப்புகளைச் சார்ந்தோரும் என்னிடம் கோரிக்கை விடுத்திருந்தார்கள். இது, காலத்தின் தேவை என்று நாங்களும் உணர்ந்தே இருக்கிறோம்.

அதன்படி, உங்களுக்கு மகிழ்ச்சியளிக்கின்ற ஒரு அறிவிப்பை இந்த மேடையில் வெளியிட விரும்புகிறேன்.

குறிப்பிட்ட இந்திய மொழிகளில் வெளியாகின்ற, தலைசிறந்த இலக்கிய படைப்புகளுக்கு தமிழ்நாடு அரசின் சார்பில், ஆண்டுதோறும் தேசிய அளவிலான விருதுகள் வழங்கப்படும். இதனை அறிவிப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். முதல்கட்டமாக, தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஒடியா, வங்காளம் மற்றும் மராட்டிய மொழிகளில் வெளியாகின்ற தலைசிறந்த படைப்புகளுக்கு ஆண்டுதோறும் "செம்மொழி இலக்கிய விருது" என்ற பெயரில் அந்த விருது வழங்கப்படும். விருதுடன்,தலா 5 இலட்சம் ரூபாய் பரிசுத்தொகையும் வழங்கப்படும்.

படைப்புகளின் இலக்கியதரத்தையும்,வெளிப்படையான தேர்வுமுறையையும் உறுதி செய்யும் விதமாக புகழ்பெற்ற எழுத்தாளர்கள், விருதாளர்கள் அடங்கிய குழு ஒவ்வொரு மொழிக்கும் தனியே அமைக்கப்படும். புரவலர் பணியை தமிழ்நாடு அரசு மனநிறைவோடு மேற்கொள்ளும் என தெரிவித்தார்.

நிகழ்ச்சியில், அமைச்சர்கள் சேகர்பாபு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மேயர் பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன்,பானு முஸ்தாக்,தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் லியோனி,கவிஞர் வைரமுத்து உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்

# ஜனவரி 20ல் தவெக தேர்தல் அறிக்கை குழு ஆலோசனை



தமிழ்நாட்டில் சட்டமன்றத் தேர்தல் நடைபெற இன்னும் சில மாதங்களே உள்ள சூழலில், மாநில அரசியல் களம் நாளுக்கு நாள் பரபரப்பாகி வருகிறது. இந்த நிலையில், தேர்தலை எதிர்கொள்ளும் நோக்கில் அனைத்து அரசியல் கட்சிகளும் தங்களின் அமைப்பு பணிகள்,பிரச்சாரத் திட்டங்கள் மற்றும் தேர்தல் அறிக்கை தயாரிப்பு பணிகளை தீவிரப்படுத்தி வருகின்றன.

திமுக, அதிமுக ஆகிய முக்கிய கட்சிகளுக்குப் பிறகு, தமிழக வெற்றிக் கழகம் எனும் தவெக கட்சியும் தேர்தல் அறிக்கை தயாரிப்பில் முக்கிய கட்டத்தை எட்டியுள்ளது. தவெக சார்பில் தேர்தல் அறிக்கை தயாரிப்பதற்காக தனியான குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும், அந்தக் குழுவின் முதல் ஆலோசனைக் கூட்டம் வருகிற 20 ஆம் தேதி நடைபெற உள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் பல்வேறு துறைகளில் அனுபவம் பெற்றவர்கள் மற்றும் கட்சியின் செயற்பாட்டாளர்கள் இடம்பெற்றுள்ளனர். கே.ஜி. அருண்ராஜ், ஜே.சி.டி.பிரபாகர், ராஜ்மோகன், மயூரி, சம்பத்குமார், அருள் பிரகாசம், விஜய் பரணி பாலாஜி, முகமது பர்வேஸ், பிரபு, கிறிஸ்டி பிரித்வி, தேன்மொழி பிரசன்னா, சத்யகுமார் உள்ளிட்டோர் இந்த தேர்தல் அறிக்கைக் குழுவில் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய், இந்த தேர்தல் அறிக்கைக் குழுவை ஏற்கெனவே அதிகாரப்பூர்வமாக அறிவித்திருந்தார்.அதன் தொடர்ச்சியாக, குழுவின் முதல் ஆலோசனைக் கூட்டம் வரும் 20 ஆம் தேதி செவ்வாய்க்கிழமை அன்று காலை 10.30 மணிக்கு சென்னையில் உள்ள கழகத்தின் தலைமை நிலையச் செயலகத்தில் நடைபெற உள்ளது.

இந்தக் கூட்டத்தில், தேர்தல் அறிக்கையின் அடிப்படை அம்சங்கள், மக்கள் மையப்படுத்திய திட்டங்கள், மாநில வளர்ச்சி குறித்த நீண்டகால நோக்கங்கள் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து விரிவாக ஆலோசிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டு மக்களின் முன்னேற்றம், சமூக நீதி, பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு, கல்வி, சுகாதாரம், விவசாயம், தொழில் வளர்ச்சி போன்ற முக்கிய துறைகளில் மக்களின் எதிர்பார்ப்புகள் என்ன என்பதைக் கண்டறிந்து, அதனை தேர்தல் அறிக்கையில் பிரதிபலிப்பது இந்தக் குழுவின் முக்கிய நோக்கமாக இருக்கும் என கூறப்படுகிறது.

# அமெரிக்க வரி விதிப்பால் மூலப்பொருள் விலை உயர்வு: கோவையில் வேலை இழப்பு அதிகரிக்கும் அபாயம்




கோவை,

இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கான வரியை 50 சதவீதமாக உயர்த்தி கடந்த ஆண்டு ஆகஸ்டு மாத இறுதியில் அமெரிக்கஅதிபர் டிரம்ப் அறிவித்தார். இதனால் கோவை, திருப்பூரில் ஜவுளித்தொழில் துறையினர் பெரும் பாதிப்பை சந்தித்து வருகிறார்கள். மேலும் மூலப்பொருட்களின் விலை உயர்வால் ஜவுளி, வார்ப்படம், மோட்டார் பம்ப் தொழில் நிறுவனங்களில் உற்பத்தி குறைந்து உள்ளது.இதன் காரணமாக தொழிலாளர்களுக்கு வேலை இழப்பு அதிகரிக்கும் அபாயம் உள்ளது.

இது குறித்து ஜவுளி தொழில் துறையினர் கூறியதாவது:-

கோவைமற்றும்திருப்பூர் பகுதியில் இருந்து அமெரிக்காவுக்கு ஆண்டுதோறும் சுமார் 3 பில்லியன் டாலர் ஜவுளிகள் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. அமெரிக்க 50 சதவீதம்வரிவிதித்ததால் அது ஒரு பில்லியன் டாலராக குறைந்துள்ளது. இந்த நிலை நீடித்தால் அமெரிக்க சந்தைக்கான இந்திய ஜவுளி ஏற்றுமதி பூஜ்ஜியமாகி விடும். 50 சதவீத வரிக்கு கூடுதலாக, சாத்தியமான பிற நிலையான வரிகளும் உள்ளன.

வார்ப்படம் மற்றும் வால்வுகள் போன்ற மதிப்பு கூட்டப்பட்ட பொருள் உற்பத்தி மீதான தாக்கம் குறித்து தொழில்முனைவோர் கூறியதாவது:-

வார்ப்புத்தொழில் துறைஇதுவரைவெளிப்படையானபாதிப்பைசந்திக்க வில்லை. ஆனாலும் அடுத்த சில மாதங்களில் 50 ஆயிரம் வேலை இழப்பு ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதில் ஒப்பந்த தொழிலாளர்களுக்கு முதலில் பாதிப்பு இருக்கும்.வார்ப்பட தொழிலை பொறுத்தவரை, ஒவ்வொரு நிறுவனமும் முதலில் தேவையை புரிந்துகொண்டு உற்பத்தி பிரிவை வடிவமைக்க வேண்டும். தொடர் ஆய்வுக்கு பிறகு உற்பத்தியை தொடங்கி நடைமுறைக்குகொண்டு வர7 மாதங்களுக்குமேல் ஆகும்.

இதனால் பொருட்களின் விலை மேலும் அதிகரிக்கும். இதற்கிடையே அமெரிக்கா 500 சதவீத வரி விதிக்கப்போவதாக கூறுகிறார்கள். அப்படியானால் ஜவுளி ஏற்றுமதி சரிவை சந்திக்கும். எனவே மாற்று வழியாக ஐரோப்பா மற்றும் இங்கிலாந்து நாட்டு சந்தைகளை இந்தியா வலுப்படுத்த வேண்டும் ஆப்பிரிக்க, மத்திய கிழக்கு மற்றும் ஆசிய சந்தைகள் போன்ற பிற சந்தைகள் உள்ளன, அவற்றில் சிலவரம்புகள் உள்ளன.

ஆப்பிரிக்க சந்தைகள் நம்பகத்தன்மையற்றதால் சவாலாக இருக்கும். ஆசிய சந்தைகள் சிறியவை. அவற்றை மேம்படுத்தி அந்த நாடுகளுக்கான ஏற்றுமதியை அதிகரிக்க மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

கோவையில் பம்புகள், மோட்டார்கள்,ஆட்டோமொபைல், ஜவுளி எந்திரங்கள், சுரங்கம் மற்றும் கட்டுமானம், மின்சாரம், எண்ணெய் மற்றும் எரிவாயு, எந்திர கருவிகள், காற்றாலை, மருத்துவம் உள்ளிட்ட பல்வேறு துறைகளுக்கு ஆண்டுதோறும் சுமார் 1.2 மெட்ரிக் டன் இரும்பு வார்ப்புகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. கோவையில் இருந்து சராசரியாக 0.75 பில்லியன் டாலர் மதிப்புக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதில் 40 சதவீதம் அமெரிக்க சந்தைக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

**செய்திகள்**
**உடனுக்குடன் படிக்க**

தினத்தளம்
DHINATH DHALAM

**வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்**

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt




# கோ.அழகாபுரியில் உள்ள ஒன்றிய அலுவலக வளாகத்தில் த.வெ.க. சார்பில் சமத்துவ பொங்கல் விழா

தமிழக வெற்றி கழகம் சிவகங்கை வடக்கு மாவட்டம் - சாக்கோட்டை மேற்கு ஒன்றியம் சார்பில் 14.01.2026 அன்று கோ. அழகாபுரியில் உள்ள ஒன்றிய அலுவலக வளாகத்தில் இந்நிகழ்வில் மாவட்ட கழக செயலாளர் M. ஜோசப் தங்கராஜ் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு, சமத்துவம், சமூக ஒற்றுமை மற்றும் மக்கள் நல அரசியல் குறித்து சி ற ப் பு ரை ய ா ற் றி னார்.

நிகழ்ச்சிக்கு ஒன்றிய கழக செயலாளர் க. சரத்பாலமுருகன் தலைமை தாங்கினார். சாதி, மத வேறுபாடுகளை தாண்டி சமத்துவத்தை வலியுறுத்தும் வகையில் பொங்கல் விழா கொண்டாடப்பட்டதுடன், பொதுமக்களுக்கு பொங்கல் பரிசு ெ த ா கு ப் பு க ள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளைமற்றும்பூத்கமிட்டி நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், கட்சி தோழர்கள் மற்றும் பொதுமக்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர். இந்த நிகழ்வு அமைதியாகவும்ஒ ழுங்காகவும் வெற்றிகரமாக நிறைவு பெற்றது.

# தூத்துக்குடியில் எம்.ஜி.ஆர். பிறந்தநாளை முன்னிட்டு முன்னாள் அமைச்சர் சி.த.செல்லப்பாண்டியன் நலதிட்ட உதவிகள், அன்னதானம் வழங்கினார்





அதிமுக தலைவரும் மு ன் ன ா ள் மு த ல மை ம ச் ச ரு ம ா ன எம்.ஜி.ஆர் 109வது பிறந்தநாளைமுன்னிட்டு அதிமுக பொதுச்செயலாளரும் முன்னாள் மு த ல மை ம ச் ச ரு ம ா ன எடப்பாடி பழனிச்சாமி ஆணைக்கிணங்கமாநில வர்த்தகஅணி செயலாளரும் முன்னாள் அமைச்சருமான சித. செ ல் ல ப் ப ா ண் டி ய ன் தலைமையில் அண்ணா நகர் 7வது தெரு டூவிபுரம் சந்திப்பில் எம்.ஜி.ஆர் படத்திற்கு மலா்தூவி மாியாதை செலுத்தி இனிப்பு வழங்கினாா்.

தூத்துக்குடி சிவன் கோவில் அருகில் எம்.ஜி.ஆர் படத்திற்குமலா் தூவி இனிப்புகள் வழங்கி பழைய மாநகராட்சி முன்பு உள்ள திருவுருவ சிலைக்கும், மட்டக்கடை, திரேஸ்புரம் அழகேசபுரம், ஆகிய பகுதியில் படத்திற்கும், அம்பேத்கா் நகாில் உள்ள மாா்பளவு உள்ள சிலைக்கும் மாியாதை செய்தபின் சில்வா்புரம் லூசியா மாற்றுத்திறனாளிகள் மறுவாழ்வு இல்லத்தில் உள்ளவா்களுக்கு மதிய உணவும் வாகைகுளத்தில் உள்ள அலெக்ஸ் கைலாஸ் முதியோா் இல்லத்தில் உள்ளவா்களுக்கு மதிய உணவும் கட்சியினர் 200 பேருக்கு வேஷ்டி சேலைகளை முன்னாள் அமைச்சர் சி.த.செல்லப்பாண்டியன் வழங்கினார். நிகழ்ச்சியில் மாநில வா்த்தக அணி துணைச்செயலாளர் மில்லை ராஜா, மகளிர் அணி துணைச் செயலாளர் கிருஷ்ணா ராதாகிருஷ்ணன், தெற்கு மாவட்ட துணை செயலாளர் சந்தனம், வர்த்தக அணி செயலாளர் துரைசிங், வடக்கு மாவட்ட ஜெ பேரவை இணைச் செயலாளர் ஜீவாபாண்டியன், முன்னாள் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் ராஜகோபால், மாவட்ட மீனவணி துணை தலைவர் டெலஸ்பர், முன்னாள் மாவட்ட மீனவரணி செயலாளர் அகஸ்டின், முன்னாள் நகர் மன்ற தலைவர் மனோஜ்குமாா், துணைத்தலைவர் ரத்தினம், முன்னாள் மத்திய கூட்டுறவு பண்டகசாலை தலைவர் எட்வின் பாண்டியன், மாவட்ட முன்னாள் மீனவரணி இணைச் செயலாளர் ஜோசப், பகுதி அவைத்தலைவர் குமார், முன்னாள் அரசு வழக்கறிஞர்கள் ராஜாராம் ஜெயம் பெருமாள், டாஸ்மாக் அண்ணா தொழிற்சங்க மாவட்ட செ ய ல ா ள ர் விஜயகுமாா், நகர செயலாளர் கார்த்தீசன், பகுதி இணைச்செயலாளர் வீரக் கோன், முன்னாள் மாவட்ட பிரதிநிதி அசரியான், முன்னாள்மேலூர் கூட்டுறவு வங்கி இயக்குனர்கள் அன்பு லிங்கம் சங்கரி, வட்ட செயலாளர்கள், சகாயராஜ் ஜெனோபர் அருண்குமார் அந்தோனி ராஜ், முன்னாள் வட்ட செயலாளர்கள் திருமணி மோகன் கோட்டாள முத்து, முருகேசன் ஜெகதீஸ்வரன் கோபி பாபநாசம் சகாயராஜ், மாரியப்பன் முன்னாள் கவுன்சிலர் பெருமாள்தாய், போக்குவரத்து பிரிவு நிர்வாகிகள் டெரன்ஸ், பெலிக்ஸ் சங்கர் கருப்பசாமி ராஜேந்திரன் சகாயராஜ், மின்சார பிரிவு கருப்பசாமி, ரவி, சிறுபான்மை பிரிவு அனிஸ்டஸ், மாவட்ட பிரதிநிதி சாந்தி, மாவட்ட மகளிர் அணி சாய் சுதா, மற்றும் ஸ்டாலின் இசக்கிமுத்து மூக்கையா, அந்தோனி ராஜ் அந்தோனி செல்வராஜ் ஆறுமுகம் சித்திரை வேல் மணிகண்டன் அனல் ராஜசேகர் சிவசாமி ராஜசேகர் அபுதாஹிர் அப்பாஸ் டேனியல் வெங்கடாசலம் பொன்ராஜ் ஜோதிகா மாரி ஆறுமுக நயினார், ஆறுமுகம், சுப்புராஜ், பிச்சையா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# 2 நாளில் ரூ.518 கோடிக்கு மது விற்பனை: பொங்கலன்று மட்டும் ரூ.251 கோடிக்கு விற்கப்பட்டதாக தகவல்

தமிழகத்தில் மொத்தம் 4,8 29 டாஸ்மாக் மதுக்கடைகள் செயல் படுகின்றன. இதில் 2,919 கடைகளி ல் மது அருந்தும் பார்கள் உள்ளன. டா ஸ்மாக் மது க் க டைகளை பொறுத்தவரை தினமும் சராசரி யாக ரூ.150 கோடி அளவுக்கு ம துவிற்பனை நடை பெறு ம். சனி, ஞாயிறு உள்ளிட்ட வார இறுதி நாட்களில் ரூ.200 கோ டிக் கும், மற்ற பண் டிகைகாலங்களில் ரூ.250 கோ டி க் கும் மது விற் பனை நடைபெறும்.

அதேபோல டிச.31 மற் றும் ஜன. 1 ஆகிய தேதி களி ல் 2 நாட்கள் ரூ.400 கோ டிக்கு மே ல் மது விற்பனை இருப்பது வழக்கம்.

அதேபோல் தீபாவளி பண் டிகையின் போதும், பொங்கல் பண்டிகையின் போது ம் மதுவிற் பனை மிக அதி க மா க இருக் கும். பொங்கல் பண்டிகை 4 நாட்கள் கொண்டாடப் ப டு ம் நிலை யி ல்இந்தாண்டு தொ டர்ந்து 5 நாட்கள் விடுமுறையாகும்.

கட ந்த ஆண்டு பொங் கல்பண்டிகையின்போது ஜன .13, 14, 16 ஆகிய 3 நாட் களில் ரூ. 725 கோடிக்கு மது விற்றது. இந்தாண்டு 1 4, 15 தேதி க ளில் டாஸ்மாக் க டை களில் ரூ.435 கோடிக்கு மது விற்பனை நடைபெற்றது. கடந்த 13-ம் தே தி ரூ.184 கோடிக் கு ம், பொங்கல் நாளில் மட்டும் ரூ.251 கோடிக்கு விற் றது.

மேலும் சென்னை மண்டலத்தில் ரூ.56 கோ டி, தி ருச்சி-ரூ.49.81 கோடி, மதுரை- ரூ.54 கோடி, சேலம்- ரூ.46 கோடி, கோவை- ரூ.44.80 கோடி அளவுக்குமதுவிற் பனை நடைபெற்றுள் ளது. தி ருவ ள்ளுவர் தினத்தன்று கடைகள் மூடப் படும் என்பதால் பெரு ம்பாலானோர் பொ ங்கல் அன்றே மது வா ங்கி வைத்தால் விற் பனைசற்று அதிகரித் துள்ளது. மேலும் டாஸ் மா க் கடைகளை தவிர தனியார் விடுதிகள், மன மகிழ் மன்றங்களில் 2 நாட்க ளில் ரூ.82.5 கோடிக்கு மது விற்பனை நடைபெற்றுள்ளது. தமிழகம் மு ழுவதும் மொத் தமாக கடந்த 14,15 ஆகிய நா ட் களி ல் ரூ.517.85 கோடிக்கு மது விற்பனை நடைபெற்றுள்ளது.



# தமிழக முன்னாள் முதல்வர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆரின் 109வது பிறந்த நாள் விழா

## அச்சிறுப்பாக்கம் அதிமுக தெற்கு ஒன்றிய செயலாளர் பங்கேற்பு

மதுராந்தகம் செங்கல்பட்டு மாவட்டம் அச்சிறுப்பாக்கம் தெற்கு ஒன்றியத்தின் சார்பில் புரட்சி தமிழர் எடப்பாடியார் அவர்களின் ஆ ணை க் கி ண ங் க செங்கைகிழக்குமாவட்ட கழகச்செயலாளர்தடுப்பணை நாயகன் திருக்கழுக்குன்றம் S. ஆறுமுகம் மற்றும் மதுராந்தகசட்டமன்றஉறுப்பினர் திருமதி K. மரகதம் குமரவேல் ஆகியோரின் ஆலோசனைன் படி அச்சிறுப்பாக்கம் தெற்கு ஒன்றியம் கழகச் செயலாளர் ஆற்றல் மிக்க தொழுப்பேடு டாக்டர் ரங்கராஜன் அவர்களின் தலைமையில் அச்சிறுப்பாக்கம் தெற்கு ஒன்றியத்தின் சார்பில் எலப்பாக்கம் ஊராட்சியில் புரட்சித் தலைவரின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மாலைஅணிவித்து மரியாதை செலுத்தி வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் அ னை த் தி ந் தி ய அண்ணாதிராவிட முன்னேற்ற கழகம் ஆட்சி அமைய சபதம் ஏற்று பொ து ம க் க ளு க் கு . இனிப்பு அன்னதானம் வழங்கினார் இந்நிகழ்ச்சியில் அச்சிறுப்பாக்கம் தெற்கு ஒன்றிய அவை தலைவர் திரு சந்திரபாபு, ஆறுவேல் எலப்பாக்கம் சுற்று வட்டார பகுதி சேர்ந்த அதிமுக நிர்வாகிகள் கிளைக் கழக நிர்வாகிகள் தொண்டர்கள் ஏராளமானோர் பங்கேற்றனர்.



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் அருகே உள்ள இரும்பேடு கிராமத்தில் தமிழக வெற்றி கழகம் சார்பில் செங்கல்பட்டு எம்.எஸ்.பாலாஜி முன்னிலையில் மாவட்ட நிர்வாகி திருமதி எஸ்.சுமதி சாமிகன்னு தலைமையில் புரட்சியாளர் அம்பேத்கர் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து பட்டாசு வெடித்து இரும்பேடு கிராமத்தில் உள்ள பொதுமக்கள்அனைவரும்ஒன்றுகூடிவண்ணக்கோலமிட்டுபுதுப்பாணையில்பொங்கலிட்டுபொங்கிவரும்வேளையில் பொங்கலோ பொங்கல் என ஆனந்த கோஷமிட்டு கிராம மக்கள் மற்றும் த,வெ,க நிர்வாகிகள் உள்ளிட்ட அனைவரும் சமத்துவ பொங்கல் விழாவை விமர்சையாக கொண்டாடினர் இதனைத் தொடர்ந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட கிராம மக்களுக்குவேட்டிசேலைதினசரிநாள்காட்டிஉள்ளிட்டநலத்திட்டஉதவிகள்வழங்கப்பட்டதுஇந்தவிழாவில்ஏராளமான கிராம மக்கள் தவெக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்



கன்னியாகுமரி மாவட்ட நிர்வாகம் சார்பில் இன்று பொதுவுடமை வீரர் ப.ஜீவானந்தம் அவர்களின் 63வது நினைவு நாளையொட்டி நாகர்கோவில் வேப்பமூடு பகுதியில் அமைந்துள்ள மணிமண்டபத்தில் அன்னாரது திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது



கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளியில் உள்ள தனியார் தொண்டு நிறுவனம் தை அமாவாசையை முன்னிட்டு ஏழை எளியவருக்கு ஆடு வெட்டி அன்னதானம் வழங்கியது. போச்சம்பள்ளியில் செயல்பட்டு வரும் தொண்டு நிறுவனம் போச்சம்பள்ளி பகுதியில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை செய்து வருகிறது இந்நிலையில் தை அமாவாசையை முன்னிட்டு போச்சம்பள்ளி வடமலைப்பட்டி பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ கந்த மாரியம்மன் கோவிலில் ஆடுகள் மற்றும் கோழிகளை பலியிட்டு அதனை சமைத்து அப்பகுதி ஏழை எளியோருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது முன்னதாக சர்க்கரைப் பொங்கல் சமைத்து அனைத்து பக்தர்களுக்கும் அன்னதானம் வழங்கினர் இந்நிகழ்வில் தொழிலதிபர் எஸ் ஆர் ரங்கநாதன்சர்க்கரைஐயப்பன்முருகன் ராதிகாஅமீர்பாஷாவேலு உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள்பலர்கலந்து கொண்டனர் நிகழ்ச்சி ஏற்பாடுகளை உத்ரா ஏற்பாடு செய்திருந்தார்.

## சுரண்டையை கண்டுகொள்ளாத போக்குவரத்து கழகம்:

# சுரண்டையில் இருந்து பொங்கல் விடுமுறை சிறப்பு பஸ்கள் இயக்கப்படததால் பொதுமக்கள் கடும் அவதி



சுரண்டையில் இருந்து பொங்கல் விடுமுறை சிறப்பு பஸ்கள் இயக்கப்படததால் பொது மக்கள் கடும் அவதியடைந்தனர்,

தென்காசி மாவட்டம் சுரண்டை மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள பொதுமக்கள், மாணவர்கள் மற்றும் பணியாளர்கள் சென்னை, கோவை, பெங்களூர், தேனி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் வசித்து வருகின்றனர். ள் தீபாவளி, பொங்கல், பூஜை, கிறிஸ்துமஸ், புத்தாண்டு, பண்டிகை மற்றும் தொடர் விடுமுறை நாட்களில் சொந்த ஊருக்கு வந்து செல்வர்.

அவர்கள் ஊருக்கு வந்து விட்டு திரும்பி செல்ல வசதியாக கடந்த 10 வருடங்களாக அரசு போக்குவரத்து கழகம் திருநெல்வேலி மூலம் முன்பதிவு இல்லாத சிறப்பு பஸ்கள் இயக்கப்பட்டு வந்தன. இந்நிலையில் இவ்வருடமும் முன்பதிவு இல்லாத சிறப்பு பஸ்களை இயக்க வேண்டும் எனவும் அரசு போக்குவரத்து கழக ஆன்லைன் முன்பதிவு அட்டவணையில் சுரண்டை - சென்னை, சுரண்டை - பெங்களூர், சுரண்டை - கோவை ஆகிய வழித்தடங்களை சேர்க்க வேண்டும் எனவும் பொதுமக்கள் பல மாதங்களாக கோரிக்கை விடுத்து வந்தனர்

ஆனால் அரசு போக்குவரத்து கழகம் சார்பாக சிறப்பு பேரூந்துகள் இயக்கப்படாததுடன் ஆன்லைன் முன்பதிவு அட்டவணையிலும் சேர்க்கப்படவில்லை.

ஏற்கனவே சுரண்டையில் இருந்து சென்னைக்கு இயக்கப்படும் விரைவு போக்குவரத்து கழக பேரூந்து வாரத்தில் 6 நாட்கள் இயக்கப்படுவதில்லை கோவைக்கு ஒரு பஸ் மட்டுமே இயக்கப்படுகிறது அதுவும் பண்டிகை நாட்களில் விரைவில் நிரம்பிவிடுவதால் நேரடி பயணம் செய்ய முடியாமல் சிரமம் அடைந்தனர்

இந்நிலையில் பொங்கல் பண்டிகை கொண்டாடிவிட்டு சென்னை மற்றும் கோவைக்கு திரும்பி செல்ல வழக்கம் போல் சிறப்பு பஸ்கள் இயக்கபடும் என எதிர்பார்த்து வந்த 300க்கும் அதிகமான பயணிகள் குறிப்பாக பெண்களும் மாணவிகளும் கடுமையான சிரமத்திற்கு உள்ளாகினர். மேலும் போக்குவரத்து கழகம் மூலம் தென்காசி, திருநெல்வேலி, சங்கரன்கோவில், ராஜபாளையம், புளியங்குடி ஆகிய பகுதிகளுக்கு அனுப்பி வைக்கவும் உரிய ஏற்பாடுகளை செய்யவில்லை

ஆகவே வரும் கோடை விடுமுறை நாட்களில் சுரண்டை பகுதி மக்கள் நலன் கருதி சென்னை மற்றும் கோவையில் இருந்து சுரண்டைக்கும், சுரண்டையில் இருந்து சென்னை மற்றும் கோவைக்கும் ஆன்லைன் முன்பதிவு அட்டவணையில் சேர்க்கவும் வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.



மறைந்த முதல்வர் எம்.ஜி.ஆரின் 109வது பிறந்தநாளையொட்டி, பள்ளிபாளையம் நகரச் செயலாளர் மற்றும் முன்னாள் நகராட்சித் தலைவர் பி.எஸ். வெள்ளியங்கிரி தலைமையில் அதிமுக நிர்வாகிகள் பள்ளிபாளையத்தில் உள்ள எம்.ஜி.ஆர் சிலைக்கு மாலை அணிவித்தனர். கட்சி ஒன்றியச் செயலாளர் செந்தில், கட்சி நிர்வாகிகள் டி.கே. சுப்பிரமணியம், ஜெயகணேஷ் மற்றும் சரவணன் ஆகியோர் உடனிருந்தனர்.

# "பணி நிரந்தர கோரிக்கை நிறைவேறும்வரை போராட்டம் தொடரும்" பகுதிநேர ஆசிரியர்கள் அறிவிப்பு



சென்னை:

"திமுக அளித்த தேர்தல் வாக்குறுதி 181-ஐ தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நிறைவேற்றும்வரை போராட்டக்களத்தைவிட்டு நகரப்போவதில்லை" என போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பகுதிநேர ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக தமிழ்நாடு பகுதிநேர ஆசிரியர்கள் கூட்டமைப்பின் மாநில ஒருங்கிணைப்பாளர் எஸ்.செந்தில்குமார் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது: திமுகவின் தேர்தல் வாக்குறுதி 181-ன் படி, 12,000 பகுதிநேர ஆசிரியர்களைப் பணி நிரந்தரம் செய்ய வலியுறுத்தி சென்னை டி.பி.ஐ வளாகத்தில் கடந்த 8-ம் தேதி தொடங்கி நடைபெற்று வருகின்ற போராட்டம் 11-வது நாளை எட்டியுள்ளது.

இந்தப் போராட்டத்தின் ஒரு பகுதியாக காவல் துறையினரால் கைது செய்யப்பட்டுத் திருமண மண்டபத்தில் அடைக்கப்பட்டிருந்த பெரம்பலூர் மாவட்டத்தைச் சேர்ந்த பகுதிநேர ஆசிரியர் கண்ணன் என்பவர், "எப்போதுதான் முதல்வர் எங்களை பணி நிரந்தரம் செய்வார்?" என்ற கடும் மன உளைச்சலில் விஷம் அருந்தி உயிரிழந்த சம்பவம் ஒட்டுமொத்த ஆசிரியர் சமூகத்தையும் உலுக்கியுள்ளது.

ஒரு ஆசிரியர் தன் உயிரையே மாய்த்துக் கொண்ட பின்னரும், தமிழக அரசோ அல்லது முதல்வரோ உயிரிழந்தவர் குடும்பத்துக்கு நிவாரணத் தொகையோ, அவரது மனைவிக்கு அரசு வேலையோ அறிவிக்காதது கடும் கண்டனத்திற்குள்ளாகி உள்ளது.

இதனிடையே, மறைந்த ஆசிரியர் கண்ணனின் மகனுக்கான கல்விச் செலவை ஏற்பதாக இந்திய ஜனநாயகக் கட்சியின் நிறுவனர் பாரிவேந்தர் மற்றும் அக்கட்சியின் தலைவர் ரவி பச்சமுத்து ஆகியோர் அறிவித்துள்ளனர். அரசின் கடமையை வேறொரு கட்சி தலைவர் செய்வது பாராட்டத்தக்கது என்றாலும், முதல்வர் இன்னும் மவுனம் காப்பது ஏமாற்றமளிப்பதாக போராட்டக் களத்தில் இருக்கின்ற பகுதிநேர ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர். தினமும் பகுதிநேர ஆசிரியர்களை கைது செய்து மண்டபத்தில் அடைப்பதன் மூலம் போராட்டத்தை நசுக்கிவிடலாம் என்று முதல்வர் நினைக்க வேண்டாம். இது கொள்கை முடிவு எடுக்க வேண்டிய நேரம். எந்தவிதமான பேச்சுவார்த்தையும் இன்றி, ஏற்கனவே அளித்த வாக்குறுதியை அரசாணையாக வெளியிட்டாலே போதும்.

பணி நிரந்தரம் என்ற ஒற்றை அறிவிப்பு மட்டுமே 12,000 குடும்பங்களின் கண்ணீரைத் துடைக்கும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# ஈரோடு நேதாஜி சந்தையில் தை அமாவாசையையொட்டி 1600க்கும் மேற்பட்டோருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது





ஈரோடு தாளவாடி தலைமலை தொட்டபுரம் ஸ்ரீ ருத்ர ஜெய வீர ஆஞ்சநேயர் திருக்கோவில் சேவா அறக்கட்டளை மற்றும் ஈரோடு தினசரி காய்கறி சந்தை நண்பர்கள் இணைந்து, 2026-ஆம் ஆண்டின் தொடக்கத்திலும் தங்களது சேவையைத் தொடர்ந்துள்ளனர். தைஅமாவாசையை முன்னிட்டு, ஈரோடு நேதாஜி காய்கறி சந்தையில் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக, 13-வது மாதமாகச் சிறப்பு அன்னதானம் நடைபெற்றது.

இந்த நிகழ்விற்கு மணியன் மில் ஸ்டோர் உரிமையாளர் பாலாஜி முன்னிலை வகித்தார். சிறப்பு அழைப்பாளர்களாக பவர் கனெக்ட் உரிமையாளர் பாலாஜி, சண்முகம், முன்னாள் மாமன்ற உறுப்பினர் அன்பழகன் மற்றும் கமிட்டியின் மகளிர் அணியினர் கலந்துகொண்டு 1000-க்கும் மேற்பட்டோருக்கு உணவை வழங்கினர்.

இதனைத் தொடர்ந்து, கொங்கலம்மன் கோவில் வீதியிலும் சுமார் 600 பேருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. நிகழ்வின் இறுதியில், அறக்கட்டளை நிர்வாகிகள் வந்திருந்த அனைவருக்கும் நன்றி தெரிவித்தனர்.



ஈரோடு தெற்கு மாவட்ட திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பாக சமத்துவ பொங்கல் விழா பெரியார் நகர் 80 அடி சாலையில் நடைபெற்றது. திமுக கழக மகளிர் அணியினர் கலந்து கொண்டு பொங்கல் வைத்து விழாவினை சிறப்பித்தனர். பிறகு கலை நிகழ்ச்சிகள் மிகச் சிறப்பாக நடைபெற்றது .இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வைதுறை அமைச்சர் சு .முத்துசாமி கலந்து கொண்டு கலை நிகழ்ச்சிகளை கண்டு களித்தார். இந்நிகழ்ச்சியில் கழக துணைப் பொதுச் செயலாளர் மாநிலங்களவை உறுப்பினருமான அந்தியூர் ப. செல்வராஜ், ஈரோடு பாராளுமன்ற உறுப்பினர் கே.இ. பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார் ,கழக நெசவாளர் அணி செயலாளர் எஸ்.எல்.டி.சச்சிதானந்தம், கழக மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், ஈரோடு மாநகரக் கழக செயலாளர் மு. சுப்பிரமணியம், மண்டல குழு தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் ,பகுதி கழக செயலாளர்கள், வட்ட கழக செயலாளர்கள், கழக சார்பு அணியினர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# மகாமேளா: திரிவேணி சங்கமத்தில் ஒரே நாளில் 3 கோடி பக்தர்கள் புனித நீராடல்



லக்னோ,

உத்தர பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் ஆண்டுதோறும் மகாமேளா நடத்தப்படுகிறது. இந்த மகாமேளா காலத்தில் அங்கு புனித நதியான கங்கை நதியிலும், திரிவேணி சங்கமத்திலும் பெருந்திரளானோர் புனித நீராடுவது வழக்கம். இதன்படி, கடந்த 3-ந்தேதி பிரயாக்ராஜில் பவுர்ணமி தினத்தில் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடல் தொடங்கியது.

இந்த மகாமேளா பிப்ரவரி 15-ந்தேதி வரை 44 நாட்கள் நடைபெறுகிறது. இதில், ஜனவரி 15 (மகர சங்கராந்தி), ஜனவரி 18 (மவுனி அமாவாசை), ஜனவரி 23 (வசந்த பஞ்சமி), பிப்ரவரி 1 (மகி பூர்ணிமா) மற்றும் பிப்ரவரி 15 (மகா சிவராத்திரி) ஆகியவை புனித நீராடல் செய்வதற்கான முக்கிய நாட்கள் ஆகும்.

இதன்படி கடந்த 15-ந்தேதி மகர சங்கராந்தி அன்று, கங்கை நதி மற்றும் திரிவேணி சங்கமத்தில் சுமார் ஒரு கோடிக்கும் அதிகமானோர் புனித நீராடினர்.

இந்தநிலையில், மவுனி அமாவாசையை முன்னிட்டு திரிவேணி சங்கமத்தில் இன்று ஒரே நாளில் சுமார் 3 கோடிக்கும் அதிகமான பக்தர்கள் புனித நீராடியுள்ளனர். புனித நீராடிய பக்தர்கள் மீது ஹெலிகாப்டரில் இருந்து மலர்கள் தூவப்பட்டன.

கடந்த ஆண்டு மவுனி ஆமாவாசையின்போது மகா கும்பமேளா நடந்து கொண்டிருந்தது.

அந்த சமயத்தில் ஒரே நாளில் சுமார் 10 கோடி பேர் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடினர். மேலும், அப்போது கூட்ட நெரிசல் சம்பவமும் அரங்கேறியது. இதனால், இந்த ஆண்டு கூட்ட நெரிசலை கட்டுப்படுத்த தீவிர முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.



அஇஅதிமுக பொதுச்செயலாளர், தமிழக எதிர்கட்சித் தலைவர், தமிழக முன்னாள் முதல்வர் எடப்பாடி.கே.பழனிச்சாமி ஆணைக்கிணங்க ஈரோடு மாநகர் அஇஅதிமுக மாவட்ட கழகம் சார்பில் தமிழக முன்னாள் பொதுப்பணித்துறை அமைச்சர், ஈரோடு அஇஅதிமுக மாநகர் மாவட்ட கழகச் செயலாளர் K.V.இராமலிங்கம் Ex.MP தலைமையில் ஈரோடு மாநகர் மாவட்ட அலுவலகம் இதயதெய்வம் அம்மா மாளிகையில் உள்ள முன்னாள் தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர் திருவுருவ சிலைக்கும், பன்னீர்செல்வம் பார்க்கில் உள்ள முன்னாள் தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர் திருவுருவ சிலைக்கும் கழக நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இந்த நிகழ்வில் முன்னாள் ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி உறுப்பினர் கே. எஸ்.தென்னரசு, முன்னாள் மாநகராட்சி மேயர் மல்லிகா பரமசிவம், முன்னாள் மாநகராட்சி துணை மேயர் கே.சி.பழனிச்சாமி ,கழக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.






# ஈரோடு மாவட்டம், வெள்ளோட்டில் மன்னர் காலிங்கராயர் முழு திருவுருவ வெண்கலச் சிலையை முதலமைச்சர் ஸ்டாலின் காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்தார்

நதிநீர் இணைப்பின் முன்னோடி" என போற்றப்படுகின்ற காலிங்கராயர் அவர்களுக்கு ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஒன்றியம், வெள்ளோடு, ராசாகோவில் அருகில் நிலம்விலைக்குவாங்கப்பட்டு அங்கே 7 அடி உயரத்தில் முழுவுருவ வெண்கலச் சிலை அமைக்கப்பட்டுள்ளது. சிலையின் கீழ் பகுதியில் காலிங்கராயர் வரலாறு குறித்த நூல்கள் மற்றும் போட்டித் தேர்வில் பங்குபெறுபவர்கள் பயன்படுத்தும் நூல்கள் அடங்கிய நூலகம் காலிங்கராயர் பெயரில் அமைக்கப்பட்டுள்ளது. காலிங்கராயர் அவர்களின் சிலையையும், நூலகத்தையும் தமிழ்நாடு முதலமைச்சர், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் நேற்று (18.01.2026) முகாம் அலுவலகத்தில் இருந்து காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் ஈரோடு மாவட்டத்தில் இருந்து வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி, மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் செல்வராஜ், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ. பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி உறுப்பினர் வி.சி. சந்திரகுமார், அந்தியூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் ஏ.ஜி. வெங்கடாசலம்,திருச்செங்கோடு சட்டமன்ற தொகுதி உறுப்பினர் தொகுதி ஈ.ஆர்.ஈஸ்வரன், காலிங்கராயர் வாரிசுதார்கள், ஈரோடு மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்ரமணியம், மாநகர திமுகசெயலாளர்சுப்பிரமணியம், மண்டல தலைவர்கள் ப.க.பழனிசாமி,குறிஞ்சிதண்டபாணி, சசிகுமார், கோட்டை திமுக பகுதி செயலாளர் ராமச்சந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# பாகிஸ்தான்: வணிக வளாகத்தில் தீ விபத்து பலி எண்ணிக்கை 6 ஆக உயர்வு



லாகூர்,

பாகிஸ்தான் நாட்டின் கராச்சியில் பிரபல வணிக வளாகம் உள்ளது. இந்த வணிக வளாகத்தில் நேற்று இரவு தீ விபத்து ஏற்பட்டது.வணிகவளாகத்தில் உள்ள கடையில் ஏற்பட்ட மின்கசிவு காரணமாக தீ விபத்து ஏற்பட்டது.

தீமளமளவெனவணிக வளாகத்தில் உள்ள பிற கடைகளுக்கும் பரவியது. இந்த தீ விபத்தில் வணிக வளாகத்தில் இருந்த பலர் சிக்கிக்கொண்டனர். தகவலறிந்து விரைந்து சென்ற தீயணைப்பு த்துறையினர், வணிக வளாகத்தில் சிக்கிய 20 பேரை பத்திரமாக மீட்டனர்.

ஆனாலும் இந்த தீ விபத்தில் ஏற்கனவே 3 பேர் உயிரிழந்த நிலையில் மேலும் 3 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதனால், பாகிஸ்தான் வணிக வளாக தீ விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை6ஆகஅதிகரித்துள்ளது. அதேவேளை, இந்த தீ விபத்து குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# வெளியூர் சென்றவர்கள் சென்னை திரும்ப வசதியாக 5,192 பேருந்துகள் இயக்கம்




சென்னை:

பொங்கல் விடுமுறையில் வெளியூர் சென்றவர்கள் சென்னை திரும்ப வசதியாக 5,192 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படவுள்ளதாக போக்குவரத்து துறை தெரிவித்துள்ளது.

பொங்கல் பண்டிகையைக் கொண்டாட சென்னையில் வசிக்கும் வெளிமாவட்ட மக்கள் சொந்த ஊர்களுக்குச் சென்றனர். இதனிடையே, சொந்த ஊர் சென்ற மக்கள் சென்னை திரும்ப வசதியாக சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

தொடர் விடுமுறை: பொங்கல் விடுமுறை கடந்த 14-ம் தேதி தொடங்கி இன்று (ஞாயிற்றுக்கிழமை) வரை இருந்ததால், பள்ளி, கல்லூரி மாணவர்கள், அரசு ஊழியர் கள் நாளை மீண்டும் அலுவலகம், பள்ளிக்குச் செல்ல ஏதுவாக இன்று மதியத்துக்கு பின் ஊர் திரும்ப திட்டமிட்டு ள்ளனர்.

சனி, ஞாயிறு விடுமுறை இல்லாத தனியார் நிறுவன பணியாளர்கள் சிலர் நேற்று காணும் பொங்கல் முடிந்ததும் சென்னை மற்றும் பிற முக்கிய நகரங்களுக்குத் திரும்பினர். நேற்று சென்னைக்கு வழக்கமாக இயக்கப்படும் பேருந்துகளுடன் கூடுதலாக 1,415 பேருந்துகளும், சென்னையைத் தவிர மற்ற நகரங்களுக்கு 2,060 பேருந்துகளும் இயக்கப்பட்டன.

சென்னைக்கு வழக்கமாக இயக்கப்படும் பேருந்துகளுடன் கூடுதலாக 3,100 பேருந்துகள் என மொத்தம் 5,192 பேருந்துகள் இயக்கப்பட உள்ளன. நாளையும் இயக்கப்படும் அதேபோல சென்னையைத் தவிர மற்ற நகரங்களுக்கு 4,080பேருந்துகள் இயக்க திட்டமிடப்ப ட்டுள்ளது. ஒரு சிலர் கூடுதலாக திங்கள்கிழமையும் விடுமுறை எடுத்து அன்றைய தினம் ஊர் திரும்பவும் திட்டமிட்டு ள்ளனர்.

இதனால் நாளை சென்னைக்கு கூடுதலாக 1,500 பேருந்துகளும், மற்ற நகரங்களுக்கு 2,400 பேருந்துகளும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

# என் ரசிகர்களை நிச்சயம் ஒருநாள் பெருமைப்படுத்துவேன் நடிகர் அஜித்குமார் பேச்சு




நடிகர் அஜித்குமார், 'குட்பேட் அக்லி' படத்தை அடுத்து ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கும் படத்தில் மீண்டும் நடிக்க இருக்கிறார். இப்படம் பற்றிய அறிவிப்பு இம்மாத இறுதியில் வெளியாகும் என்று கூறப்படுகிறது.

இதற்கிடையே கார் பந்தயத்திலும் கவனம் செலுத்தி வருகிறார் அஜித். கடந்த ஆண்டு, அபுதாபி, பார்சிலோனா, மலேசியா உள்பட பல்வேறு நாடுகளில் நடந்த கார் பந்தய போட்டிகளில் தனது 'அஜித்குமார் ரேஸிங்' அணியினருடன் கலந்து கொண்ட அவர் இப்போது, 24 ஹெச் சீ ரிஸ்- மத்திய கிழக்கு டிராபிக்கான பந்தயத்தில் கலந்துகொண்டிருக்கிறார்.

துபாயில் அவரை திரை பிரபலங்கள் பலரும் தொடர்ச்சியாக சந்தித்து வருகின்றனர். அனிருத் அஜித்தை சமீபத்தில் சந்தித்திருந்தார். இவரைத் தொடர்ந்து சிபிராஜ் , விக்னேஷ்சிவன்-நயன்தாரா தம்பதி, ஜிவி பிரகாஷ் ஆகியோர் சந்தித்துள்ளனர்.

அஜித் அணியின் கார் போட்டியின்போது விபத்துக்குள்ளானது. போட்டியில் பங்கேற்ற கார் திடீரென தீப்பற்றி எரியத் தொடங்கியது. இதனால் காரை ஓட்டிச் சென்ற வீரர் அயர்டன் ரெடான்ட் உடனடியாக காரை நிறுத்தி வெளியே ஓடினார். பின்பு தீயணைப்பு உபகரணங்கள் வைத்து காரின் தீ அணைக்கப்பட்டது. முன்னதாக இதே போன்று அஜித் அணியின் கார்கள் அடிக்கடி விபத்துகளை சந்தித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில்,"எனக்கு ஆதரவு கொடுக்க திரண்டு வந்த ரசிகர்கள், நான் ரேஸ் ஓட்டுவதை, எங்கள் அணி பரிசு வெல்வதை பார்க்க முடியாதது வருத்தமாக இருக்கிறது. என் ரசிகர்களுக்கு சத்தியம் செய்கிறேன். நல்ல காலம் காத்திருக்கிறது. எங்கள் அணி நிச்சயம் ஒருநாள் அவர்களை பெருமைப்படுத்தும்" என்று அஜித்குமார் கூறியுள்ளார்.

# "மத்திய அரசு உரிய நிதியை வழங்குவதில்லை" நிதியமைச்சர் தங்கம் தென்னரசு குற்றச்சாட்டு



சிவகாசி:

மத்திய அரசு தமிழகத்துக்கு உரிய நிதி பகிர்வு வழங்காத நிலையிலும், உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டங்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அதிக நிதி ஒதுக்கி பணிகளை மேற்கொண்டு வருவதாக, சிவகாசியில் ரயில்வே மேம்பால பணிக்கு அடிக்கல் நாட்டிய நிதியமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்தார். சிவகாசி மாநகராட்சியில் ரூ.45.6 கோடி மதிப்பில் திருத்தங்கல் ரயில்வே மேம்பால கட்டுமான பணி மற்றும் ரூ.58 கோடி மதிப்பில் இரண்டாம் கட்ட சுற்றுச்சாலை அமைக்கும் பணிக்கு நிதியமைச்சர் தங்கம் தென்னரசு அடிக்கல் நாட்டினார்.

அப்போது அமைச்சர் தங்கம் தென்னரசு பேசியதாவது: சிவகாசி சாட்சியாபுரம் ரயில்வே மேம்பாலத்தை ஒப்பந்த காலத்திற்கு முன்னரே கட்டுமான பணிகளை முடித்து பயன்பாட்டுக்கு கொண்டு வந்தது திராவிட மாடல் அரசு. திருத்தங்கல் பாலம் கட்டுமானப் பணிகளும் விரைவில் முடிக்கப்பட்டு பயன்பாட்டுக்குக் கொண்டு வரப்படும்.

சிவகாசி சுற்றுசாலை திட்டத்தில் முதற்கட்ட பணிகள் இறுதி கட்டத்தை எட்டி உள்ள நிலையில், இரண்டாம் கட்ட பணிக்கு அடிக்கல் நாட்டப்பட்டு உள்ளது. சிவகாசிக்கு புதிய மாநகராட்சி அலுவலகம், பல்நோக்கு மாநாட்டு கூடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றி மக்கள் திட்டங்களை நிறைவேற்றி வருபவர் முதல்வர் மு.க.ஸ்டாலின். அவர் முதல்வராக வந்த பின்னர் தான் சிவகாசியின் வளர்ச்சிக்கு பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. விருதுநகர் மாவட்டம் மட்டுமின்றி தமிழகத்தின் வளர்ச்சிக்கும் சிவகாசி அடிப்படை என்பதால் பல்வேறு திட்டங்களுக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சிவகாசி தொகுதிக்கு முதல்வர் தான் விடியலை தந்து உள்ளார்.

தமிழகத்தில் 1.31 லட்சம் பெண்களுக்கு மாதம் ஆயிரம் மகளிர் உரிமை தொகை வழங்கப்பட்டு வருகிறது. விடியல் பயணம், காலை உணவு, கல்லூரி மாணவிகளுக்கு ஊக்கத்தொகை என பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

Printed by,Hiwins Printers,Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at ERODE, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.